
பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 27 | வியாழக்கிழமை | 14.09.2023 | அதிர்வு 44

## புதிய இந்தியத் தூதுவராக ஸ்ரீ சந்தோஷ் ஜா நியமனம்



இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக ஸ்ரீ சந்தோஷ் ஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் 06▶

## குண்டுத் தாக்குதல்கள் நடத்தி ஆட்சியைப் பிடிக்கவில்லை; பொய்ப் பரப்புரைகள் மூலம் மொட்டுவை வீழ்த்த முடியாது!




### சர்வதேசம் போடும் தாளத்துக்கு ஆட ராஜபக்ஷக்கள் பொம்மைகள் அல்லர் என விளாசித் தள்ளிய பஸில்

– சுடர் திலீபன் –

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பயணத்தை முடக்கும் வகையில் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் மீண்டும் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மொட்டுக் கட்சியை வீழ்த்த முடியாது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன 02▶

## குற்றவாளிகள் தப்ப முடியாது!



### அரசை எவரும் கவிழ்க்கவும் முடியாது என ரணில் சூளுரை

- சுடர் திலீபன் -

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இங்கு இரண்டு வழிகளில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. அந்த விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றேன். 02▶

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்பு!

### விடுதலைப் புலிகளின் சைனட் குப்பியும் இரண்டு இலக்கத் தகடுகளும் சிக்கின







முல்லைத்தீவு, செப்ரெம்பர் 14. முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் நேற்று இடம்பெற்ற நிலையில், மூன்று மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் 03▶

## ரயில் இயந்திர சாரதிகளின் பணிப்புறக்கணிப்பு நிறுத்தம்

### சாதகமான பேச்சையடுத்து

சாத்தியமான கலந்துரையாடல்களை அடுத்து ரயில் இயந்திர சாரதிகள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டது.

ரயில்வே திணைக்கள அதிகாரிகளுக்கும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டவர்களுக்கும் இடையில் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின் போது சாதகமான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

5 வருடங்களாகத் தாமதமாகியுள்ள தரமுயர்வை விரைவுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு 06▶

## இரகசியம்



“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஒன்றாகச் சென்று சந்திக்கும் முயற்சியை மேற்கொள்வோம் வாருங்கள். அவர் நிச்சயமாக எங்களைச் சந்திக்கச் சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.”

– இவ்வாறு தமிழ்த் 03▶

# கிளிநொச்சி மாணவியைக் காணவில்லை மக்களின் உதவியைக் கோரியுள்ள பொலிஸ்

கிளிநொச்சி, விநாயகபுரம் பகுதியில் காணாமல்போயுள்ள உயர்தர மாணவி ஒருவரைக் கண்டறியப் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

இந்த மாணவியைக் கடந்த ஒரு வாரமாக காணவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

18 வயதுடைய புவனேஷ்வரன் ஹனி என்ற மாணவியே காணாமல் போயுள்ளார்.

மேலதிக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பாமையால் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாணவி காணாமல்போன தினத்தன்று அவர் மேலதிக வகுப்புக்கும் சமுகமளித்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அந்த மாணவி கண்டறியப்படாமையால் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

மாணவி தொடர்பில் தகவல் அறிந்தால் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.



## குற்றவாளிகள்...

விசாரணைகளின் முடிவின் பிரகாரம் குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்கள் தப்பிக்க முடியாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அதற்கு முன்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரை அவர் சந்தித்து உரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் நாட்டின் தலைவர். நாட்டுக்கும் அரசுக்கும் அபகீர்த்தி ஏற்பட ஒருபோதும் இடமளியேன். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புதிதாகக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட தரப்பினர் தங்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அது அவர்களின் கருத்துச் சுதந்திரம். அதில் நான் தலையிடமாட்டேன். எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன். அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது. இந்த இரு குழுக்களின் விசாரணை அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதில் ஒளிவு மறைவு எதுவும் இருக்காது.

இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து அரசுக்கு எதிராக எதிரணிகள் அரசியல் செய்கின்றன. எந்த நடவடிக்கையாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது.

அன்று சர்வதேச விசாரணைக்கு எதிராகக் கோஷம் எழுப்பிய ஒருசில தரப்பினர், இன்று சர்வதேச விசாரணை வேண்டுமெனக் கோருவது வேடிக்கையாகவுள்ளது. எந்த விசாரணை நடந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்." – என்றார்.

## குண்டுத் தாக்குதல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ சூளுரைத்தார்.

"தாங்கள் போட்ட தாளத்துக்கு ஆடவில்லை என்ற காரணத்துக்காகவே ராஜபக்ஷக்களைச் சில சர்வதேச நாடுகள் பகைத்தன. அவர்கள் போடும் தாளத்துக்கு ஆட ராஜபக்ஷக்கள் பொம்மைகள் அல்லர்" – என்றும் அவர் விளாசித் தள்ளினார்.

"இன்றும் ஒருசில சர்வதேச நாடுகள் மொட்டுக் கட்சியையும் ராஜபக்ஷக்களையும் அடியோடு வீழ்த்தும் நோக்கில் செயற்படுகின்றன. ஆனால், அவர்களின் நிகழ்ச்சி நிரல் ஒருபோதும் வெற்றியளிக்காது" – என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மொட்டுக் கட்சியோ அல்லது ராஜபக்ஷக்களோ குண்டுத் தாக்குதல்களை நடத்தி ஆட்சியைப் பிடிக்கவில்லை. பல லட்சம் மக்களின் ஒருமித்த ஆணையுடன்தான் ஆட்சி அதிகாரத்துக்கு நாம் வந்தோம். அந்த ஆணையை நாம் இன்னமும் இழக்கவில்லை. மீண்டுமொரு தேர்தல் நடந்தால் எமக்கான மக்கள் ஆணை நிரூபணமாகும்" – என்றும் பஸில் ராஜபக்ஷ மேலும் கூறினார்.



## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டமையுடன், விடுதலைப் புலிகளின் சைனட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருள்களாக எடுக்கப்பட்டன.

இந்நிலையில் ஏழு நாள்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 9 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் 7ஆம் நாள் அகழ்வாய்வுகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றன.

இந்த அகழ்வாய்வுகள் தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா, தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில் –

“கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஏழாம் நாள் அகழ்வாய்வில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டமையுடன், சைனட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருள்களாக எடுக்கப்பட்டன.

இந்தப் புதைகுழியிலுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மிக நெருக்கமாக, ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதால், அகழ்வாய்வு செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

அகழ்வாய்வுகள் மேற்கொள்ளும் போது, சில நாள்களில் ஓரிரு எலும்புக்கூட்டுத் தொகுதிகளையே அகழ்ந்தெடுக்க முடிகின்றது.

இந்த மனிதப் புதைகுழியிலுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதிகளையும், தடயப் பொருள்களையும் எடுத்தாலே, இது தொடர்பில் சரியான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

எனவே, அகழ்வாய்வுப் பணிகளின் காலத்தை வரையறுக்க முடியாதுள்ளது.

ஏற்கனவே அகழப்பட்டுள்ள குழியிலிருந்து மனித எச்சங்களையும், தடயப் பொருள்களையும் முழுமையாக அகழ்வாய்வு செய்து எடுப்பதற்கு ஒரு சில வாரங்கள் நீடிக்கலாம் என நினைக்கின்றேன்.

அதனைவிட இன்னும் மேலதிகமாக குழியைத் தோண்டி அகழ்வாய்வுகள் மேற்கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் எனக் கூறமுடியாது.

இந்தப் புதைகுழி தொடர்பிலான அறிக்கைகள், அகழ்வாய்வு செய்யும் குழுவினரால் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், தடயப் பொருள்களும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள பிரேத சாலையில் விசேட அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாய்வுக்கென 57 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி புதைகுழிக்குரிய தகரப் பந்தல், தங்குமிட வசதி, மலசலகூட வசதி உள்ளிட்ட விடயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இருக்கின்ற நிதி மூலத்தை வைத்து கடந்த வாரத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமையுடன், இந்த வாரத்திலும் அகழ்வாய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அடுத்த வாரமும் அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமாகவுள்ளது.

தொடர்ந்து அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு நீதிவான் உத்தரவிடுவாரெனில் அகழ்வாய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.

எடுக்கப்பட்ட தகட்டிலக்கம் தொடர்பாக, அவை எந்தக் காலத்துக்குரியவை போன்ற விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம். அதன்பின்னர் தகட்டிலக்கங்கள் தொடர்பான விவரங்கள் அறியத்தரப்படும்.” – என்றார்.

நேற்று அகழ்வாய்வு இடம்பெற்ற பகுதிக்கு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.

என்னுடைய பக்தி வாசகர்களுக்கு இது புதுமையான செய்தியாக இருக்காது என நினைக்கிறேன்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் நெருங்குகின்றது. அதனால் காட்சிகள் மாறவிருக்கின்றன என சில வாரங்களுக்கு முன்னர் நான் கோடி காட்டி இருந்தேன்.

ஈழத் தமிழர்களுக்காக பல தரப்புக்களும் நீலிக் கண்ணீர் வடிப்பர். ஈழத் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதில் எதிரணியினரை விட தாங்களே தீவிரமானவர்கள் என்று காட்ட முயற்சி எடுக்கப்படும். அதன் ஒரு கட்டமாக பிரதமர் மோடி தமிழ் கட்சிகளை அழைத்துக் குசலம் விசாரித்துப் பேசினாலும் ஆச்சரியம் இல்லை என்று சுட்டிக்காட்டி இருந்தேன்.

அதற்கான வெற்றிலை வைப்புத்தான் விக்னேஸ்வரனின் இந்த அழைப்பு.

அவர் ஏற்கனவே இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தரப்புக்கள் சிலவற்றுடன் (அண்ணாமலை அல்லர்) தொடர்புகளை வைத்திருப்பவர். அது எனக்கு தெரியும். அந்தத் தரப்புகளின் ஆசீர்வாதத்துடன்தான் இந்தப் பூர்வாங்க முயற்சியை அவர் ஆரம்பித்து இருப்பார் என்று எனது பட்டறிவு கூறுகின்றது.

“அவர் (மோடி) நிச்சயமாக எங்களைச் சந்திக்கச் சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.” – என்ற விக்னேஸ்வரனின் திடமான நம்பிக்கை வாசகத்தின் பின்புலமும் அதுதான்.

சுமந்திரன், ஶ்ரீதரன் எல்லோரையும் மோடியைச் சந்திக்கக் கூட்டிச் செல்ல வேண்டும் என்ற அவரது கோரிக்கை, தான் விரிக்கும் தடத்தில் இருந்து தமிழரசை அரங்கவிடாமல் மாட்ட வைக்கும் தந்திரம்.

எது, எப்படி என்றாலும் தமிழ்த் தேசியப் பரப்புகள் எல்லாம் சேர்ந்து இந்தியாவுக்கு அழுத்தம் தரும் ‘செக்’கை ஒன்று பட்டு வைத்தால், அது நல்லதுதானே...! யார் குத்தியாவது அரிசியானால் சரிதானே...!

என்றாலும் இந்த விடயத்தை குறிப்பிடும் போது, வேறொரு விவகாரத்தையும் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி சென்று திரும்பியதும் கொழும்பில் இந்திய தூதுவர் தமிழ் கட்சிகளின் எம்.பிக்களைச் சந்தித்தார் அல்லவா?

அப்போது தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் புதுடில்லியில் இந்தியப் பிரதமரைச் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீள வலியுறுத்தப்பட்டது.

“ஓ! அது நடக்கின்றது. விரைவில் சாத்தியப்படும்” – என்றார் தூதுவர் கோபால் பாக்லே.

அப்போது கூட்டத்தில் இருந்த சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குறுக்கிட்டார்.

“கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்லர், எம்.பிக்களும் அதில் (புதுடில்லி செல்லும் அணியில்) அங்கம் வகிக்க வேண்டும்” என்றார் அவர்.

அதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் சம்பந்தனைச் சுட்டிக்காட்டி “அது எங்கள் முடிவு அல்ல. நீங்கள் (சம்பந்தன்) எடுக்க வேண்டிய தீர்மானம்!” – என்று பந்தைத் தம் பக்கம் வராமல் தள்ளிவிட்டார் தூதுவர். பாக்லே.

அந்தப் பந்தைத் தாங்கள் விளையாடாமல் விக்னேஸ்வரனைக் கொண்டு விளையாட வைக்கின்றார்களோ என்னவோ என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

\+ \+ \+

தற்போது அமெரிக்காவின் வொஷிங்டன் டி.ஸியில் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் போன்றோரைத் தமிழ் பிரமுகர் ராம் மாணிக்கலிங்கத்துடன் சேர்ந்து சந்தித்து வரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அடுத்த ஓரிரு தினங்களில் நியூயோர்க் செல்கின்றார் என்று அறிய வந்தது. இந்த சமயத்தில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நியூயோர்க்கில் ஐ.நா. தொடர் சம்பந்தமான நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக அங்கிருக்கின்றார். இந்த விவகாரத்தை ஒட்டிய சில தகவல்களை உறுதிப்படுத்தக் காத்திருக்கிறேன். கிடைத்தால் நாளை பகிர்வேன்.



# 100 அடிப் பள்ளத்தில் ஓட்டோ விழுந்ததில் மூன்று பேர் காயம்

(செ.தி.பெருமாள்,எஸ்.சதீஸ் )

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியின் சென்ஜோன் டிலரி பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி ஐம்பது அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் 12.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில்பொ கவந்தலாவ மோரா தோட்டப்பகுதியில் இருந்து அட்டன் பகுதிக்கு சென்று கொண்டிருந்த ஓட்டோவே விபத்துக்குள் ளானது.


ஓட்டோவின் சாரதி, அவரது மனைவி, ஒன்றரை வயது குழந்தை ஆகியோரே காயமுற்ற காயமுற்ற நிலையில் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். வைத்தியசாலையில் ஸ்மார்ட் போனுக்குத் தடை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஸ்மார்ட் போன் பாவிக்கப் பணிப்பாளர் தடை விதித்துள்ளார் .

கடமை நேரத்தில் தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோர் ஸ்மார்ட் போன் பாவிக்க யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தடை



விதித்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில், சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 8 வயது சிறுமிக்குத் தவறான முறையில் “கானுலா” பொறுத்தப்பட்டமையால், சிறுமியின் இடது கை மணிக் கட்டுடன் அகற்றப்பட்டுள்ளது.

அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தாதியர்களின் கவனக் குறைவினாலேயே சிறுமியின் கை அகற்றப்பட்டது எனப் பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டு வரும் சூழலில் பணிப்பாளர் ஸ்மார்ட் போன் பாவிக்கத் தடை விதித்துள்ளார்.

# தியவன்னா ஆற்றில் உலவும் ஆவிகளால் நாடாளுமன்றின் முடிவுகளில் பாதிப்பாம்!

இறந்தவர்களின் ஆவிகள் நாடாளுமன்ற தியவன்னா ஆற்றில் உலவுவதால், நாடு தொடர்பாக நாடாளுமன்றம் மூலம் எடுக்கப்படும் நிர்வாக முடிவுகளை அது பாதிக்கிறது என்று ஜோதிர்வேதி எண் கணித நிபுணரான டொக்டர் திசாநாயக்க பரிசா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத்தின் மாதிரி மற்றும் இருக்கைகள் அமைப்பதில் வாஸ்து குறைபாடுகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீ என்ற எழுத்து பாவனையில் பிழை இருப்பதாகவும், அது நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்



நாடாளுமன்ற கட்டிடத்தின் வடிவமைப்பில் பல வாஸ்து குறைபாடுகள் இருக்கின்றன இணைய ஊடகம் ஒன்றில் நடந்த விவாதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக கோபாலரத்தினம்



(அபு அலா)

கிழக்கு மாகாண பேரவைச் செயலாளராக கலாநிதி எம்.கோபாலரத்தினம் தமது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டானினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கமைவாக பிரதம செயலாளர் ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயனாவினால் வழங்கி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக அவர் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல். பி.மதநாயகா, மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.மன்சூர், மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், விளையாட்டு திணைக்கள மாகாண பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் ஐ.எம்.றிக்காஸ் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிக விரைவில் வர்த்தமானியில் வரும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தகவல்

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில், சர்வதேச அளவு–கோல்களின்படி தயாரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சமநிலையான சட்டமொன்றைக் கொண்டு வரும் நோக்கில் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்பட்டதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி –

“சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும், நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் சமநிலையான சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதியமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்தப் புதிய சட்டம் சாதகமான மட்டத்தில் திருத்தப்பட்டுள்ளது. நமது



நாட்டில் சட்டங்களைத் திருத்தவும், புதிய சட்டங்களை உருவாக்கவும் ஒரு பொறிமுறை உள்ளது. எனவே அந்த முறைகளுக்கு ஏற்ப இந்தப் புதிய சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்த சட்டம் குறித்த புரிதலை நாட்டு மக்கள் அனைவரும் பெற முடியும். – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழரசு நிலைப்பாட்டில் மாற்றமில்லை

இப்போது தமிழ்த் தேசிய பரப்பில் அதிகம் பேசப்படும் விடயம் 13 ஆவது அரசமைப்புத் திருத்தமாகும்.

தமிழ் இனத்துக்கான ஆயுதப் போராட்டத்தில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் விளங்கிய காலகட்டத்தில் - போர்வெற்றிகளை அவர்கள் குவித்துக் கொண்டிருந்த சமயத்தில் - 13வது திருத்தம் பற்றிய விடயம் பேசு பொருளாக இருக்கவில்லை.

ஏன், அப்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முக்கிய தமிழ்த் தலைவர் ஒருவர் 13 ஆவது திருத்தத்தின் சவப்பெட்டிக்குக் கடைசி ஆணியும் அறையப்பட்டு விட்டது என்று முழங்கினார் என்பது மறக்க - மறுக்க - கூடியதல்ல.

ஆனால், இன்று நிலைமை வேறு. 13 ஆவது திருத்தத்தையாவது முழு அளவில் - முதற்கட்டமாக - பெற முடியாதா என்ற ஏக்கம் தமிழர்கள் மனதில் இல்லாமல் இல்லை.

ஆனாலும், ஒரு விடயம் சுட்டிக்காட்டப்பட வேண்டும். யுத்தம் முடிந்த பின்னரான கடந்த 14 ஆண்டு காலத்தில், தமிழர் தரப்பின் பிரதான தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசு 13ஆம் திருத்தம் குறித்து குழப்பகரமான நிலைப்பாட்டையும் கருத்தையும் பிரதிபலித்து வருகின்றது என்று சிலர் விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர். ஆனால் அது தவறு.

அதை அவதானிப்பதற்கு சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்னர் - யுத்தம் முடிந்து சரியாக 3 ஆண்டுகளில் - 2012 மேயில் - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு மட்டக்களப்பில் நடந்த போது, கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று, இரா.சம்பந்தந் ஆற்றிய தலைமைப் பேருரை கவனிக்கத்தக்கது.

"நாம் கோரும் இந்த ஆட்சியலகிற்கான அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் முன்னெடுப்பானது 1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவின் அரசமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தினை விடவும் மேலே உள்ள ஒரு புள்ளியில் இருந்து தொடங்கி, அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வைத் தருவதாகப் பரிணமிக்க வேண்டும் என முன் வைக்கப்பட்டிருக்கும் யோசனையே எமது கட்சியின் நிலைப்பாடும் ஆகும். இந்த நிலைப்பாட்டை நாம் எடுத்ததற்கான காரணம் 13 ஆவது சட்டத் திருத்தத்தையே ஒரு நேர்த்தியான தீர்வாக நாம் ஏற்றுக் கொண்டு விட்டோம் என்பதோ அல்லது மேற்குறிப்பிட்ட வகையிலான எமது உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படும் சூழலில் சர்வதேச சட்ட நியதிகளின் அடிப்படையில் எமக்கிருக்கும் புறவயச் சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகிக்க மாட்டோம் என்பதோ அல்ல. மாறாக, இதுவே இன்றைய சூழலில் நடைமுறைச் சாத்தியமான ஒன்றாக இருப்பதனாலாகும்.

"மேலும் நமக்கான அரசியல் அதிகாரங்கள், இந்தியாவினதும் அமெரிக்காஉள்ளிட்ட உலக சமூகத்தினதும் அனுசரணையுடனும் துணையுடனுமே பெறப்பட வேண்டியுள்ள தற்போதைய சூழலில் அவற்றைப் பெறுவதற்கு நாம் முன்வைக்கும் மேற்படி தீர்வுப் பொறிமுறையானது நியாயமான ஒன்று என அவர்களால் கருதப்படத்தக்கதாகவும் இருக்கும்."

- என்று அப்போது தெரிவித்திருக்கிறார் சம்பந்தன்.

அதைத்தான் இப்போதும் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியினரும் வலியுறுத்தி நிற்கின்றனர்.

13 விவகாரம் தொடர்பில் தமிழரசு கட்சி பெரிய கருத்து நிலைப்பாட்டு மாற்றத்தை எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

# தெமட்டகொட தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் தீ பரவல்

கொழும்பு, தெமட்டகொடப் பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக வீடொன்று முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆராமய வீதிப் பகுதியில் அமைந்துள்ள சியபஸ்செவன தொடர்மாடி குடியிருப்பில் நேற்றுப் புதன்கிழமை இந்தத் தீ பரவியுள்ளது.

கொழும்புத் தீயணைப்பு பிரிவினர், தெமட்டகொடை பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் வீட்டில் இருந்த சொத்துக்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ பரவல் ஏற்பட்டபோது வீட்டில் எவரும் இருக்கவில்லை. இதன் காரணமாக உயிர் சேதங்கள் எதுவும் பதிவாகவில்லை.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. தீப்பரவல் குறித்து தெமட்டகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## புதிய இந்தியத் தூது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் விரைவில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்தியத் தூதுவராகப் பதவி வகித்திருந்தார். தற்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அவர் பதவி மாற்றம் பெற்றுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பதவி வகித்த கோபால் பாக்லே, ஆஸ்திரேலியாவுக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ஆஸ்திரேலியாவில் விரைவில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரயில் இயந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயந்திர சாரதிகள் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 150 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. நேற்று



புதன்கிழமை காலை முதல் 40 இற்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

ரயில் இயந்திர சாரதிகளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக நாடளாவிய ரீதியாக உள்ள ரயில் நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதேவேளை, கொழும்பு - கோட்டை மற்றும் மருதானை உள்ளிட்ட 32 ரயில் நிலையங்களில் பொதுமக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# இன்று 75 வது அகவை காணும் மூத்த பத்திரிகையாளர் சலீம்

- வீரகத்தி தனபாலசிங்கம் -



அரை நூற்றாண்டுக்கும் அதிக மான காலமாக பிராந்திய செய்தி யாளர்களாக பணியாற்றிவருபவர் கள் என்று வடக்கு, கிழக்கு மாகாணங் களில் இன்று ஒரு சிலரே இருக்கி றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் – அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் – அத்தகைய நீண்டகால அனுபவ முடைய பத்திரிகையாளராக ஏ.எல்.எம். சலீம் அவர்களைக் குறிப்பிட முடியும்.

தொடர்ந்தும் துடிப்புடன் பணி யாற்றிவரும் அவர் இன்று 75 ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனு றுதியுடைய பங்களிப்பைச் செய்ய வும் வாழ்த்துவோம்.

நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966 ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தி யாளராகப் பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்தார். பிறகு சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக் குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்ககாலம் முதலிருந்தே சலீம் பணியாற்றி வருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.

இலங்கையின் தமிழ்ப்பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச்சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி. சிவநாயகம், ஆர்.சிவகுருநாதன், கே.சிவப்பிரகாசம், ஆ.சிவனேசச் செல்வன், எஸ். நடராசா, கே.கே. இரத்தினசிங்கம், கானமயில்நாதன் ஆகியோரின் காலத்தில் அவர்களின் வழிநடத்தலில் பணியாற்றிய சலீம் இன்றைய இளம் பத்திரிகை ஆசிரி யர்களின் காலத்திலும் பிராந்திய செய்தி யாளராகத் தொடருகிறார்.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகை யாளர்களின் செயற்பாட்டு முறை களில் நவீன கருவிகளைப் பயன் படுத்தி கடைப்பிடிக்கவேண்டியிருக்கும் மாற்றங்களுக்குத் தன்னை இசைவாக் கிக் கொண்டு தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்ப் பேசும் பத்திரிகையாளர்களில் சலீ மும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்திய செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாள ராக மாத்திரமல்லர், அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுத. வந்திருக்கிறார். பத்தி ரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப்ப பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டித் தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத் தைத் தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடக வியலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புக்களில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் வடமாகா ணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்க ளிலும் தமிழ்ப் பேசும் ஊடகவிய லாளர்கள் மத்தியில் மிகுந்த நட் புரிமை கொண்டவராக சலீம் விளங்கு கிறார்.

முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங் கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றி யம் ஆகியவற்றின் தாபக உறுப்பின ரான சலீம், கிழக்கிலங்கை செய்தியா ளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராக இருந்துவரும் அவர் தற்போது நிந்த வூர் கலை இலக்கியப் பேரவையின் உப தலைவராக செயற்படுகின்றார்.

சலீமின் பத்திரிகைத்துறை சேவைக் காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலா பூசணம் விருது (2008), இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனயாளர் விருது (2017), கல்முனை மாநகர சபையின் ஊடக முதுசம் பட்டம் என்பவை அவருக்குக் கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருது கள்.

பத்திரிகைத்துறையில் சலீம் 50 வருடங்களைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு சில வருடங்களுக்கு முன் னர் அம்பாறை மாவட்ட ஊடகவிய லாளர்கள் சம்மேளனம் விமரிசையாகப் பெருவிழா எடுத்து அவரைக் கௌர வித்ததுடன் "பொன்விழாக்காணும் சலீம் " என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரை யாற்றி அவரைக் கௌரவப்படுத்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்த விழாவில் தமிழ்,முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஊடக வியலாளர்களும் சமூகப்பிரமுகர் களும் கலந்துகொண்டு சிறப்பித்த னர். அது தனது பத்திரிகைத்துறை வாழ்வில் சலீம் செய்த பெறுமதியான பங்களிப்புகளுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அபிமானத்தின் சான்றாக அமைந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாப் பல்கலைக்கழக மாணவர்களின் வரவேற்புப் பதாதையில் தமிழ் புறக்கணிப்பு

## குறுகிய காலத்திலேயே சிங்கள மயமாவதாகக் குற்றச்சாட்டு




வவுனியா பல்கலைக் கழகத்தில் 2021 (22) ஆம் வருடத்தில் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றி வவுனியா பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ள பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை வவுனியா பல்கலைக் கழகத்தில் நேற்று முன் தினம் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த மாணவர்களை வரவேற்கும் முகமாகப் பல்கலைக்கழக விடுதி மற்றும் அதனுடன் இணைந்த பகுதியில் வரவேற்பு பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பதாதை யில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கிலவ மொழியும் காணப்படுகின்றது. தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாவது பல்கலைக கழகமும், தமிழ் மக்கள் வாழும் பகுதி யில் உள்ள வன்னிக்கான பல்கலைக் கழகமுமான வவுனியாப பல் கலைக் கழகத்தில் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னரே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்களம யமாக்கல் இடம்பெறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் சமூக வலைத் தளங்களில் விசனம் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இன்று 75 வது...**

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சலீம் போன்ற மிகவும் நீண்ட காலப் பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலை முறை ஊடகவியலார்களுக்கு முன்னு தாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி நூல் வடிவில் கொண்டு வரவேண்டும். இது அவரது 75 ஆவது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

வடபகுதியில் இன்று இருக்கக் கூடிய மிகவும் மூத்த பிராந்திய பத் திரிகையாளரான வடமராட்சி புலோலி சி. தில்லைநாதனின் 73 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஜூனில் இதே கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை யாளர்களிடம் பெரும்பாலும் காணப் படும் ஒரு முக்கியமான குறைபாடு அவர்கள் தங்களது சேவைக்கால அனுபவங்களின் ஊடாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல்,சமூக நிகழ்வுப் போக்குகளை வரலாற்றுப் பதிவாக எழுதுவதில் அக்கறை காட்டுவதில்லை என்பதாகும். எமது நண்பர் அமரர் வவுனியா மாணிக்கவாசகம் இதில் விதிவிலக்காக நடந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர்களுக்கு அண்மைய உதாரணமாகும்.

இன்றைய செய்தி நாளைய வரலாற்றின் அரை குறையான முதல் வரைவு என்று சொல்வார்கள். அதனால் தான் மூத்த ஊடகவியலாளர்களைப் பற்றி எழுதக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்த கோரிக்கையை முன்வைப் பதற்கு நான் தவறுவதில்லை.

இறுதியாக ஒரு தனிப்பட்ட குறிப்பு. எனக்கும் சலீமுக்கும் இடையிலான நட்பு கால் நூற்றாண்டுக்கும் அதிக மான நீட்சி கொண்டதாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தினக் குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியர் என்ற வகையில் நான் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு செய்தியாளர்களைத் தேடிக்கொண்டிருந்த போது எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டவர்களில் திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதனும் அம்பாறை மாவட்டத்தின் சலீமும் மட்டக்களப்பின் சண். தவராசாவும் முக்கியமானவர்கள்.

அவர்கள் தினக்குரலின் பிராந்திய செய்தியாளர்களாக பணியாற்ற முன்வந்ததுடன் மாத்திரம் நின்றுவிட வில்லை, பல்வேறு பகுதிகளில் செய்தி யாளர்களாக நியமிக்கப்படக்கூடிய வர்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தியும் தந்தார்கள். அவர்களது உதவிகள் விரிவான பிராந்தியச் செய்தி யாளர்கள் கட்டமைப்பு ஒன்றை உரு வாக்கி புதிய பத்திரிகையை குறுகிய காலத்திற்குள் பரந்தளவு வாசகர்கள் மத்தியில் கொண்டுசெல்ல எமக்கு உதவியது.

அது விடயத்தில் சலீமின் பங்களிப்பு என்றென்றைக்கும் மறக்க முடியாதது. முதலில் அவர் முழு அம்பாறை மாவட்டத்துக்குமான தினக்குரல் செய்தியாளராக இருந்துகொண்டு பின்னர் அந்த மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செய்தி யாளர்களை தேடித்தந்தார். தினக் குரலின் ஆரம்பக் கட்ட வளர்ச்சியில் ஒரு பிராந்தியச் செய்தியாளர் என்ற வகையில் சலீமின் பங்களிப்பு குறிப் பிடத்தக்கது.

நண்பர் சலீமுக்கு மீண்டும் பிறந்த நாள் வாழ்த்துக்களை கூறிக்கொண்டு அவரது பத்திரிகைத்துறைப் பணி தொடர வேண்டுகிறேன். மூத்த பத்தி ரிகையாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம்.

# நாட்டு மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் தொழிற்சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை

## பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்கும் என அறிவிப்பு



நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் தொழிற்சங்கங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும், அதற்குக் கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஒட்டுமொத்த மக்களும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாரிய பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ரயில் சாரதிகள் சங்கத்தினர் பதவி மற்றும் சம்பள உயர்வு கோரி பொறுப்பற்ற வகையில் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

ரயில் சாரதிகள் சங்கத்தின் ஒரு தரப்பினரது பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் பொதுப்பயணிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு போராட்டத்தில் ஈடுபடும் சாரதிகள் பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டில் தமக்கு மாத்திரம் தான் பொருளாதார பாதிப்பு உள்ளது என்று நினைத்துக் கொண்டு ரயில் சாரதிகள் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், பொறுப்பற்ற வகையில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பொதுமக்களை நெருக்கடிக்குள்ளாக்கி அதனைக் கண்டு மகிழ்ச்சியடையும் மனநிலையில்தான் ரயில் சாரதிகள் உள்ளார்கள்.

ஆகவே நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் தொழிற்சங்கங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். – என்று தெரிவித்துள்ளார்

# சுகாதார அமைச்சரரைப் பதவி விலக வற்புறுத்தி தொடங்கியது தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட மூன்று பேரை அவர்களின் பதவியில் இருந்து நீக்குமாறு கோரி தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஒன்றியம் நேற்று புதன்கிழமை முதல் தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.

அதன் பிரகாரம் நேற்றுக் காலை 9மணிக்கு சுகாதார அமைச்சுக்கு முன்னால் சத்தியாக்கிரக போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சுகாதார துறையில் இடம்பெறும் மோசமான கொடுக்கல் வாங்கல், மோசடிகள், பெறுகை கோரல் செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பது, சுகாதார அமைச்சு உட்பட எந்த அதிகாரிகளும் தற்போது இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பில் உணர்வற்று இருப்பது, மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு, தரமற்ற மருந்துப் பொருள்களைப் பயன்படுத்தியதன் மூலம் நோய்க்குள்ளான மக்கள் மரணிப்பது, மருந்து விலைக் கட்டுப்பாட்டுக்குச் செல்லாமல் இருப்பது உட்பட பல பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் ஆகியோரே பொறுப்புக்கூற வேண்டும் எனக் கூறப்பட்டது.

அதனால் இவர்கள் 3 பேரையும் அவர்களின் பதவிகளில் இருந்து நீக்க வேண்டும் என தெரிவித்தே தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஒன்றியம் தொடர் சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கமன்த்த ராஷோன் தெரிவித்தார்.

## சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட

# எட்டுக் கோடி ரூபா பெறுமதியான அதி நவீன சொகுசு ஜீப் பறிமுதல்



வரி செலுத்தப்படாமல் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் இருந்து நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 8 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான அதிநவீன சொகுசு ஜீப் ஒன்று வலான ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்வதற்காக குருநாகல் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் அது கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அதிசொகுசு ஜீப் ஒன்று குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக வலான ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குருநாகல் பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்த ஜீப் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டஇந்த ஜீப்பைக் கொழும்புப் பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வைத்தியர் ஜீப்பை விற்பனை செய்து தருமாறு சம்பந்தப்பட்ட வர்த்தகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார் எனவும், அதற்கமைவாக அவர் மற்றொரு வர்த்தகருக்கு விற்பனை செய்வதற்காக ஜீப்பை மறைத்து வைத்திருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியர் போலி ஆவணங்களைத் தயாரித்து சுங்கத் திணைக்களத்தின் ஊழியர் ஒருவரின் உதவியுடன் வரி ஏய்ப்பு செய்து இந்தக் காரை நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார் எனவும், இது வேறு நபர்களின் பெயரில் போலியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்த வாகனம் தொடர்பான ஆவணங்களும், வருமான வரி செலுத்தியதாகக் கூறப்படும் ஆவணங்களும் போலியானவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

# உடுப்பிட்டியில் பிரபல பாடசாலைகளுக்கு மிக அண்மையில் புதிதாக மதுபானசாலை

உடுப்பிட்டியில் பிரபல பாடசாலைகளுக்கு மிக அண்மையில் புதிதாக மதுபானசாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரியவருகின்றது.

பொதுமக்களின் தீவிர எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் புலம்பெயர்ந்து வாழும் வணிக முயற்சியாளர் ஒருவர் இந்த மதுபானசாலையை அமைப்பதில் அரசியல் ஆதரவுடன் முயன்றுவருகிறார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து ஐந்நூறு மீற்றர்களுக்கும் குறைவான தொலைவில் உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து நவிண்டில் நோக்கிய வீதியில் இமையாணன் மேற்கில், பிரதான வீதியிலேயே இந்த மதுபானசாலை அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இமையாணன் இ.த.க பாடசாலையிலிருந்தும் நவிண்டில் தாமோதரா பாடசாலையிலிருந்தும் இம்மதுபானசாலை மிகக் குறைந்த தூரத்திலிருப்பதும் மாணவர்கள் மத்தியில் மதுபானப் பாவனையை ஊக்கப்படுத்திவிடும் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலக ஆளுகைப் பரப்பினுள், கரவெட்டி பிரதேச சபையினுள் உள்ளடங்கும் பகுதியில், பாடசாலைகளுக்கு மிக அருகில், குடிமனைகள் நிறைந்துள்ள பகுதியில் இம் மதுபானசாலை அமைக்கப்பட்டிருப்பது பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் ஏற்கனவே இவ்வாறான மதுபானசாலையொன்று ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்து, பொதுமக்கள் எதிர்ப்பினால் அந்த மதுபானசாலை வல்லைப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



# கோட்டாவின் அறையில் மீட்கப்பட்ட பணம் குறித்து விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவு!

கடந்த வருடம் ஜனாதிபதி மாளிகையில் பணம் மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணை குறித்து முறையாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 9 ஆம் திகதி, மக்கள் போராட்டம் இடம்பெற்ற வேளையில், ஜனாதிபதி மாளிகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ அறையிலிருந்து ஒரு கோடியே 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது, ஊழல் அல்லது சொத்துக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் எதுவும் பதிவாகவில்லை என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளது என குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு தெரிவித்த போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதன்போது, சில விடயங்களை மாத்திரம் குறிப்பிடும் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டாம் என, அந்த ஆணைக்குழுவுக்கு அறிவித்த நீதவான், பொறுப்பான நிறுவனம் என்ற வகையில் நீதிமன்றில் ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தப் பணத்துக்கு உரிமை கோருவதால், பணச் சலவைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக விசாரணை நடத்த முடியுமா என சட்டமா அதிபரிடம் கோரப்பட்டுள்ளதாகவும், இதுவரையில் அதற்கான அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லை எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.






# உழைப்பாளர் வரியில் திருத்தம் மேற்பார்வைக் குழு தலையிடும்!





எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் உழைக்கும் போது செலுத்தும் வரியில் திருத்தங்களை மேற்கொள்ளும் விடயத்தில் தலையிடவுள்ளதாக “பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு“ தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்தக் குழு தொழிற்சங்கங்களுக்கு தெரிவித்துள்ளது.

வரிப் பிரச்சினையை தீர்ப்பது குறித்து அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் வலியுறுத்தவுள்ளதாகவும் துறைசார் மேற்பார்வைக் குழு தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளது.

வரித்திருத்த நடவடிக்கையின் போது பாதிக்கப்படும் தொழிற்சங்கங்கள் சிலவற்றுடன் கலந்துரையாடுவதற்காக, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத்தணித்தல்பற்றியதுறைசார்மேற்பார்வைக் குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியிருந்தது.

வரிப் பிரச்சினைகள் காரணமாக பல்வேறு துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமையையும் இந்தக் கலந்துரையாடலின் போது அந்தக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த கூட்டத்தில் சுமார் 25 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் சுயாதீன கண்காணிப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# ஆயிரம் தாதியர்கள் சேவையில் இணைப்பு

தாதியர் கற்கைநெறியை பூர்த்தி செய்த 1,000 தாதியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆள்சேர்ப்பு விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தாதியர் கற்கைநெறியை நிறைவு செய்த இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதேவேளை, இணை சுகாதார பட்டதாரிகள் குழுவை சுகாதார அமைச்சின் பதவிகளில் உடனடியாக இணைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தாதியர் பயிற்சிக்காக 3,500 மாணவர்களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்காக 2019, 2020 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நாளை முதல் ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# மாமன்மாரை வாளால் வெட்டிய மருமகன்மார் இருவரும் கைது!

## மடக்கிப் பிடித்தனர் மட்டு. பொலிஸார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள இரு பிரதேசங்களில் இரு வெவ்வேறு சம்பவங்களில் தத்தமது மனைவியரின் தந்தைகளான மாமான்மாரை வாளால் வெட்டிய இருரையும் சைக்கிள் திருடிய இளைஞனையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதூர் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை 9 ஆம் திகதி மதுபோதையில் மனவியின் தந்தை மீது வாளால் வெட்டித் தாக்குதல் நடத்திய 30 வயதுடைய இளைஞர் தப்பி ஓடித் தலைமறைவாகியிருக்கிறார். மாமனார் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தலைமறைவாகிய மருமகனைப் பொலிஸார் நேற்று முன்தினன் மாலை கைது செய்தனர்.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் திகதி மாமாங்கம் பகுதியில் மதுபோதையில் மனைவியுடன் ஏற்பட்ட சண்டையின் போது மனைவியாரின் தந்தை மீது வாளால் வெட்டித் தாக்குதலை மேற்கொண்ட மற்றொரு இளைஞன் தப்பி ஓடி தலைமறைவாகியிருந்தார். மாமனார் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்ட மருமகனையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

இதேசமயம், புளியந்தீவு அதிகாரி வீதியில் வீடு ஒன்றில் வேலி அடைக்கும் வேலையில் ஈடுபட்ட 22 வயது இளைஞன் ஒருவன் அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளைத் திருடிக்கோண்டு சென்ற நிலையில் சிசிரி கமராவில் பதிவாகிய படத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டான்.

வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 3 பேரையும் நேற்று மட்டக்களப்புநீதிவான்பீற்றர்போல்முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்திய போது வாள் வெட்டுத் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பிய மாமாங்கத்தைச் சேர்ந்தவரின் மருமகனை பிணையில் விடுவித்தார். ஏனைய இருவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரையுமான 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.




# பன்னிரண்டரைக் கோடி ரூபா பெறுமதி கொக்கைன் அடங்கிய் பார்சல் சிக்கியது

பிரேஸிலில் இருந்து அனுப்பப்பட்டு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சரக்குமுனையத்திற்கு வந்த பன்னிரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் அடங்கிய பொதியை இலங்கை சுங்கப் பிரிவினர் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் விமானம் மூலம் நாட்டிற்கு வந்த சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்றை விமான சரக்குப் பிரிவின் சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தடுத்து வைத்துள்ளனர் என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

பிரேஸிலில் இருந்து உள்ளூர் சரக்குதாரர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பொதியில் சுமார் இரண்டரைக் கிலோகிராம் கொக்கைன் இருந்ததை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் பொதியைப் பெறுவதற்காக விமான நிலையம் வந்தவரை அதிகாரிகள் கைது செய்தனர் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# இன்றைய ராசி பலன்கள் - 14.09.2023

## மேஷம்

இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும். சௌகரியங்கள் குறைந்து கானப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் இன்று சற்றுக் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் சில மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் அனுசரித்து நடந்து கொள்வ-தன் மூலம் நல்லுறவு ஏற்படும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள சிறிய அளவிலான கடன் பெறுவீர்கள். இன்று பண வரவுக்கு சாதகமான நாள் அல்ல.

தேவையற்ற மனக் கவலைகள் காரணமாக நீங்கள் தலைவலிக்கு ஆளாக நேரலாம்.

## ரிஷபம்

இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்றைய செயல்களை கவனமாகக் கையாளவும். எந்தச் செயல் செய்தாலும் ஒன்றிற்கு இரண்டு தடவைகள் யோசிக்கவும்.

இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று பணிகள் அதிகமாகக் காணப்படும். இதனால் சிறிது பதற்றம் காணப்படும்

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதற்கேற்றவாறு நடந்து கொண்டு ஒற்றுமையாய் இருங்கள்.

ஆன்மீகப் பயணங்களுக்காக பணத்தைச் செலவு செய்வீர்கள். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

## மிதுனம்

உங்கள் பணிகளை எளிதாகச் செய்வீர்கள். இன்று நன்மைகள் ஏற்படும். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள்.

பணியிடத்தில் அனைத்தும் சுமுகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் வெற்றி கிடைக்கும். திருப்திகரமான நிலை இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவீர்கள். உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

உங்கள் செயல்களை புத்திசாலித்-தனத்துடன் செய்ய வேண்டும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் சிறிது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் செய்யும் செயலில் கூடுதல் முயற்சி தேவை.

பணிகள் அதிகமாகக் காணப்படும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணிகளைக் கையாளவும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி காண்பீர்கள். இன்று சிறிது நேரம் உங்கள் பிரியமானாவரோடு பேசுவதைத் தவிர்க்கவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். திட்டமிட்டு பணத்தை கவன-மாக செலவு செய்ய வேண்டும்.

## சிம்மம்

உங்கள் மனது ஆன்மீக ஈடுபாடு கொண்டிருக்கும். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தடைகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

புரிந்துணர்வின் குறைபாடு காரணமாக உங்கள் துணையிடம் வாக்குவாதம் செய்வீர்கள். நல்ல புரிந்துணர்வை வளர்க்க அவர் உணர்விற்கும் இடம் கொடுங்கள்.

பணத்திற்கான அதிர்ஷ்டம் குறைவு. இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் உடன் பிறந்தோரின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கன்னி

இன்று சில தடைகள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சுமுகமான பலன்கள் கிடைக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் அனைடஹ்தும் சிறப்புடன் நடக்கும்.

நிதிநிலைமை இறுக்கமாக காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள்.

## துலாம்

இன்று சிறந்த நாளாக இருக்கும். உங்கள் செயலில் வளர்ச்சியும் வெற்றியும் பெறுவீர்கள். உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும்.

உங்கள் பணிகள் இன்று சுமுகமாக நடக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும். அதனை உங்கள் நலனுக்கு பயன்படுத்தலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருபீர்கள். இருவரும் மகிழ்ச்சியான வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளும் மனநிலையில் இருப்பீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதியதாக இருக்கும். அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும். இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## விருச்சிகம்

இன்று சிறப்பான வெற்றி காணப்படும். உங்களின் அனுசரணையான வார்த்தைகளின் மூலம் பிறரை கவர்வீர்கள். உங்களிடம் காணப்படும் வெற்றி காரணமாக நீங்கள் உச்சத்துக்கு செல்வீர்கள்.

பணியிடத்து சவால்களை எளிதாக சமாளிப்பீர்கள். உங்கள் பணிகளை செய்யும்போது அனுசரித்து நடந்துகொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தி-க்கொள்வீர்கள். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். நல்ல பயனுள்ள விடயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.09.2023




ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டவர்களாக இருப்பீர்கள். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும். உங்கள் எண்ணங்களில் தெளிவு காணப்படும்.

பணியிடத்தில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் கவனமாகப் பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்லுறவைப் பேண இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு மிதமாக காணப்படும். இன்று சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உங்கள் முகத்தில் முகப்பரு வர வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் கடின முயற்சியால் வளர்ந்து வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பணியில் புதிய கருத்துக்களை கொணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் உங்கள் பிரியமானவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

இன்று நிதிவளர்ச்சி கானப்படுகின்றது. உங்கள் சேமிப்பை உயர்த்த முடியும், பண இருப்பை நன்கு பராமரிக்க முடியும்.

நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனமாய் இருக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டாம். அது உங்கள் விருப்பத்தை அடைவதில் தடை ஏற்படுத்தும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. தவர்கள் நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். தகவால் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை.

பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும். பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.




ஆரம்பத்தில் சில தடைகளை சந்தித்தபின் உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளை நீங்கள் நல்ல விதத்தில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளின் மூலம் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

துணையிடம் நேர்மறையான எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

தியானம் அல்லது பிரார்த்தனை காரணமாகஇன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.







# இந்தியாவில் நிபா வைரஸ் பரவல் அதிகரிப்பு: பாடசாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன!





இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவிவரும் நிபா வைரஸ் காரணமாக அந்த மாநிலத்தின் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

கேரளா மாநிலத்தில் இதுவரை இந்த வைரஸ் காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன், இதுரை 130 இற்கும் அதிகமானோரிடம் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


வௌவால்கள், பன்றிகள் மற்றும் மனிதர்களின் திரவங்களின் மூலம் இந்த வைரஸ் பரவலடைகிறது என கேரள மாநில சுகாதாரத்துறை குறிப்பிட்டுள்ளது.

நிபா வைரஸினால் பாதிக்கப்பட்ட வர்களை கண்டறிந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்றானது மனிதனில் இருந்து மனிதனுக்கு பரவுகிறது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# நிபா வைரஸ் அபாயம் தமிழகத்தில் இல்லை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவிப்பு





தமிழகத்தில் நிபா வைரஸ் குறித்து எவ்வித அச்சமும் இல்லை என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், அண்டை மாநிலமான கேரளாவில் நிபா வைரஸின் தாக்கம் உள்ளது.

தமிழ்நாடு, கேரளா இடையேயான எல்லையோர மாவட்டங்களான நீலகிரி, கோவை, திருப்பூர், கன்னியாகுமரி, தென்காசி உட்பட்ட மாவட்டங்கள் அண்டை மாநிலங்களோடு ஒருங்கிணைந்த மாவட்டங்களாக உள்ளன. இந்த மாவட்ட எல்லைப்பகுதிகளிலும் கேரள மாநிலத்திலிருந்து வருபவர்களுக்கு காய்ச்சல் அறிகுறி கண்டறிவதற்கான பரிசோதனைகள் செய்யப்படவுள்ளன. இதற்கான பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறன.

இந்த சோதனையின் போது காய்ச்சல் அறிகுறிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டால், அவர்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருகிறது.

எனவே, தமிழகத்தை பொறுத்த வரையில் நிபா வைரஸ் குறித்து எவ்வித அச்சமும் இல்லை என்று தெரிவித் துள்ளார்.

# தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க முடியாது!



தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியாது என கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு நிமிடத்திற்கு 5,000 கன அடி தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு காவிரி ஒழுங்காற்றுக்குழு அண்மையில் பரிந்துரை செய்தது.

எனினும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கர்நாடக மாநிலத்தில் போதுமான மழை பெய்யாத காரணத்தால், தமிழ் நாட்டிற்கு தண்ணீர் திறக்கும் நிலையில் நாங்கள் இல்லை. நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் ஆரம்பிக்கும் முன்பு, இந்த விவகாரம் தொடர்பாக எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி திட்டமிட்டு வருகிறோம் என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

# லிபியாவில் கடும் புயல், மழை! உயிரிழப்பு 5,200 ஆக அதிகரிப்பு!



லிபியாவில் கடும் புயல் மற்றும் மழை காரணமாக 5,200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடலின் ஒரு பகுதியான அயோனியன் கடல் பகுதியில் உருவான டேனியல் புயல் கடந்த 10 ஆம் திகதி லிபியாவின் பங்காசி பகுதியில் கரையைக் கடந்தது. இதன்போது மணிக்கு 165 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியது.

டேனியல் புயலால் கடந்த சில நாட்களாக லிபியாவில் பலத்த மழை பெய்தது. கனமழையால் கிழக்கு லிபியாவில் டெர்னா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, அதன் இரண்டு அணைகள் உடைப்பெடுத்தன.

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை காணவில்லை!

இதன் காரணமாக டெர்னா, பாய்தா, சூசா, ஷாஹத், மார்ஜ் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த டெர்னா நகருக்குள் வெள்ளம் வெகு சீற்றத்துடன் பாய்ந்து, அங்கிருந்த வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருள்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச்சென்றது.

இந்த வெள்ளத்தில் 2000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று பிரதமர் ஒசாமா ஹமாட் அறிவித்தார்.

டெர்னா நகர அவசர கால மீட்புக்குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,300-ஆக உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது லிபியாவின் கிழக்கு அரசின் உள்விவகார அமைச்சு குறைந்தது 5,300 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவின் புனித போரை ஆதரிக்கிறோம்: வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் அறிவிப்பு!

மேற்குலகம் உடனான ரஷ்யாவின் புனிதப்போரை ஆதரிக்கிறோம் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிலிருந்து ரயில் பயணமாக ரஷ்யாவுக்கு சென்ற வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன்னுக்கு, பிரிமோர்ஸ்கி க்ராய் ரயில் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. ரயில் நிலையத்திலிருந்து வோஸ் டோச்னி சென்ற கிம் ஜங் உன்னை ரஷ்ய ஜனாதிபதி புடின் வரவேற்றுள்ளார்.

இதன் பின்னர் வோஸ்டோச்னியில் உள்ள ரொக்கெட் ஏவுதளங்களை ஜனாதிபதி புடினுடன் சென்று கிம் ஜங் பார்வையிட்டுள்ளார்.



இந்த நிலையில், வட கொரியாவின் ஆயுதங்களுக்கு பதிலாக ரஷ்யா உணவு தானியங்களை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு தலைவர்களும் முன்னெடுத்த ஆலோசனைகளின் விரிவான தகவல் வெளியாகாத நிலையில், ரஷ்யாவின் விண்வெளி ஆய்வுகளில் கிம் ஜங் உன் விருப்பம் தெரிவித்துள்ளார் என கூறப்படுகிறது.